தேதி: 14.02.2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC.89/2022

வழக்கு சாட்சி எண். PW 1

| | |
|---|---|
| பெயர்: தேவிகா | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர். )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது அத்திமரப்பட்யில் குடியிருந்து வருகிறேன். நான் எம்எஸ்சி பிஎட் வரை படித்து உள்ளேன் . எனது கணவர் உப்புக் குடோனில் உப்பு மூட்டையை லாரியில் ஏற்றும் வேலை செய்து வருகிறார். சண்டை சமயத்தில் எனது கணவர் வாரம் ஒரு முறை தான் வருவார்.

2. கடந்த 16.07.2019 ம் தேதி மாலை 4.30 மணிக்கு நான் எனது மகனுடன் ஸ்டீபன் என்பவருக்கு சொந்தமான வயற்காட்டில் எனது மகனை விளையாடச்சொல்லி விட்டு நான் உட்கார்ந்து கொண்டு இருந்தேன்.

3. அப்போது எனது கணவரின் அண்ணன் மனைவியான பழனிவேலம்மாள், ரோஸிலின் மேரி ஆகிய இருவரும் அங்கு வந்து நான் ஊட்கார்ந்து இருந்த போது நாங்கள் வருவது தெரியாதா ஏன் வழியில் உட்காருகிறாய் என்று கேட்டார்கள்.

4. அப்போது 1ம் எதிரி அலுமனிய டப்பாவில் கொண்டு வந்த மண்ணை கீழே தட்டி விட்டு விட்டு என்னிடம் " நீ எவ்வளவு திமிர் இருந்தால் இங்கு உட்கார்ந்து இருப்பாய் என்று கேட்டார்கள் . " பிறகு என்

தலைமுடியை பிடித்து 1ம் எதிரி இழுத்து கீழே குனிய வைத்து அந்த அலுமினிய டப்பாவை வைத்து எனது பிடறியில் அடித்தார்கள் . அப்போது 2ம் எதிரியும் 1ம் எதிரியுடன் சேர்ந்து அலுமினிய டப்பாவை வைத்து எனது பிடறியில் அடித்தார்கள்.

5. பிறகு எனக்கு கண்ணால் முழுவதுமாக முழித்து பார்க்க முடியவில்லை . அப்போது அருகில் மாரியம்மாள் மற்றும் பாப்பா ஆகியோர் இருந்தார்கள். சண்டை முடிந்த பிறகு 3ம் எதிரி பேச்சியம்மாள் வந்த இவளை அடித்து கொல்லுஙகள் நான் ஏற்கனவே இவளை அடிக்க நினைத்து இருந்தேன் என்று சொல்லி 1ம் மற்றும் 2ம் எதிரியை என்னை அடிக்க சொன்னார்கள்.

6. ஆஜர் எதிரிகள் தான் தன்னை அடித்ததாக சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார் . காயம்பட்ட நான் எனது அத்தை கோமதி மூலமாக ஆட்டோ மூலமாக திருவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு சேர்ந்தேன் . அங்கு வந்த ஆழ்வார்காவல் நிலைய காவலர்கள் என்னை விசாரிக்க நான் நடந்த விபரத்தை சொன்னேன் . காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள் . நான் நடந்த விவரத்தை சொன்னேன் . அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள் . புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் . புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

7. நான் எனது முதல் விசாரணையில் சொன்ன அதே விபரத்தை தான் எனது புகார் மனுவிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான் . இந்தவழக்கில் புகார் மனு யார் எழுதினார்கள் என்றால் நான் தான்

எழுதினேன். புகார் மனுவில் குறிப்பிட்டபடி பிஏட் படித்து உள்ளேனா என்றால் படித்து உள்ளேன். அது எத்தனை ஆண்டு கால படிப்பு என்றால் 2 ஆண்டுகள் ஆகும்.

8. புகார் மனுவை நான் தான் காவல்நிலையத்தில் போய் கொடுத்தேன் என்றால் சரியல்ல . மருத்துவமனையில் இருக்கும் போது நான் எழுதிவைத்திருந்ததை தான் எழுதிக்கொடுத்தேன் . சம்பவம் நடைபெறுவதற்கு முன்னால் எங்களுக்குள் ஏற்கனவே பிரச்சனை உள்ளது என்றால் சரிதான்.

9. ஏற்கனவே நடந்த சம்பவம் சம்மந்தமாக நான் ஏற்கனவே புகார் மனுகொடுத்து உள்ளேனா என்றால் உள்ளேன் தற்போது அந்த புகார் மனு சம்மந்தமான ஒரு ரசீது என்னிடம் உள்ளது.

10. நான் ஏற்கனவே பிரச்சனை நடந்த ஆழ்வார்திருநகரி காவல் நியைலத்தில் புகார் மனு கொடுத்தது சம்மந்தமாக உள்ள ரசீது என்னிடம் உள்ளதை இந்த புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

11. சம்பவத்திற்கு முன்னால் நடந்த புகார் கொடுத்தற்கு போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். ஆனால் அந்த புகார் மனுவை உறவு முறை என்பதால் சமாதானமாக முடித்து அனுப்பினார்கள் . சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடம் வீடு என்றால் சரியல்ல . அது வயற்காடு ஆகும். அந்த வயல் ஸ்டீபன் என்பவருக்கு சொந்தமானது ஆகும்.

12. எங்களுக்குள் பிரச்சனை வந்த விபரம் ஸ்டீபன் என்ற வயல் உரிமையாளருக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர்கள் யாரும் அந்த இடத்தில் இல்லாததால் தெரிய வாய்ப்பில்லை . சம்பவம் நடந்து மருத்துவமனைக்கு செல்லும் வழியில் தான் ஆழ்வார்திருநகரி காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான் . ஆனால் அப்போது சம்பவத்தில்

அடிப்பட்டதன் காரணமாக கண் விழிக் முடியாமல் இருந்ததால் நான் ஆழ்வார் திருநகரி காவல் நிலையத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான்.

13. காவல் நிலையத்தை தாண்டி தான் ஆழ்வார்திருநகரி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் . ஆனால் நான் அங்கு செல்லவில்லை . காரணம் உறவினர்கள் திருவைகுண்டத்தில் இருப்பதால் திருவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன்.

14. இந்த வழக்கில் சுரேஷ் என்ற ஆட்டோடிரைவருக்கு வழக்கு குறித்து தெரியுமா என்றால் அது பற்றி எனக்குதெரியாது . ஆனால் நான் திருவைகுண்டம் அரசு மருத்துவமனைக்கு வந்த விபரம் அவருக்கு தெரியும். இந்த சம்பவத்தை எனது மாமியாருக்கு தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். அவர்தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்.

15. நான் சொன்ன மாதிரி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் படித்திருந்த ஒரே காரணத்தினால் குடும்ப சண்டையை புகார் கொடுத்து காவல்நிலையத்திற்கு கொண்டு வந்து உள்ளேன் என்றால் சரியல்ல.

16. புகார்வாக்குமூலம் கொடுத்த பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் எனது கணவருக்கு தான் தெரியும் . எனக்கு புகார் வாக்குமூலம் கொடுத்த பிறகு விசாரித்த விபரம் எனக்கு தெரியாது . ஏனெனில் எனக்கு போன் கிடையாது . நான் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து

காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /-
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.

தேதி: 14.02.2023

வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண். 2, திருவைகுண்டம்

வழக்கு எண். CC.89/2022

வழக்கு சாட்சி எண். PW 2

| | |
|---|---|
| பெயர்: கோமதி | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுகா: | வயது: |

( எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர். )

முதல் விசாரணை :

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

1. நான் தற்போது அம்மன்புரத்தில் குடியிருந்து வருகிறேன். 1ம் எதிரி மற்றும் 2ம்எதிரி எனது மருமகள் ஆவார்கள் . அ.சா.1ம் எனது மருமகள் ஆவார். எனது 3மகன் கார்த்தீக் என்பவர் உப்புக் குடோனில் உப்பு மூட்டையை லாரியில் ஏற்றும் வேலை செய்து வருகிறார்.

2. கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு மாலை 4.30 மணிக்கு அ.சா.1 அவரது மகனுடன் வயற்காட்டில் விளையாடிக்கொண்டு இருந்த போது , அ.சா. 1 ஓரமாக உட்கார்ந்து கொண்டு இருந்தார்.

3. அப்போது எனது மருமகள்கள் பழனிவேலம்மாள் , ரோஸிலின் மேரி ஆகிய இருவரும் அங்கு வந்து அ.சா.1 ஊட்கார்ந்து இருந்த போது ஏன் வழியில் உட்காருகிறாய் என்று கேட்டு அலுமனிய டப்பாவில் கொண்டு வந்த அ.சா.1 னின் குறுக்கில் அடித்தார்கள்.

5. சம்பவம் குறித்து பக்கத்து வீட்டை சேர்ந்த மாரியம்மாள் என்பவர் எனக்கு சம்பவத்தை சொன்னார். காயம்பட்ட எனது மருமகள் அ.சா.1 யை திருவைகுண்டம் அரசுமருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தேன் .

ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகள் எனது மருமகள்கள் என்று சாட்சி அடையாளம் காட்டினார். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

6. போலீசார் என்னை எதுவும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான் . நான் போலீசாரிடம் கையொப்பம் எதுவும் செய்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரில் பார்த்தேனா என்றால் பார்த்தேன் . நான் தான் சண்டையை விலக்கி விட்டேன்.

7.போலீசார் திருவைகுண்டம் மருத்துவமனைக்கு வந்து விசாரிக்கும் போது சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொன்னேன் என்றால் சரிதான் . நான் எனது சின்ன மருமகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி சொல்லியதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவர் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின் கையொப்பம் பெறப்பட்டது.

ஒப்பம் /–
திரு. தே.மயில்சாமி.,
நீதித்துறை நடுவர் எண்.2,
திருவைகுண்டம்.